**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 5/2021**

**வா.சா.1 – கேசவன்** **10.06.2025**

**'1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1ம் வாதி பாண்டியம்மாள் எனது மனைவி. 2ம் வாதி முத்துமணி எனது மனைவியின் உடன்பிறந்த சகோதரி ஆவார். நான் வருவாய்துறையில் கிராம நிர்வாக அலுவலராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் சுமார் 19 1/2 ஆண்டுகள் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். பொதுவாக நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துள்ளதால் சொத்து ஆவணங்கள் பற்றிய விபரம் ஓரளவு தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் கூட்டுறவுத் துறையில் வேலை பார்த்து வந்தார். 1ம் பிரதிவாதியின் கணவர் தற்கொலை செய்து கொண்டதாக கூறினார்கள். ஆனால் ஆவணங்களில் அவர் இயற்கை மரணம் அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 4 இலக்க சொத்துக்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4 இலக்க சொத்துக்களை பற்றிய விபரம் எனக்கு தெரியும். தாவா 3ம் லக்க சொத்தை 1ம் பிரதிவாதியின் கணவர் 4ம் பிரதிவாதியின் தகப்பனார் ராஜேந்திரனுக்கு 2003ல் கிரையம் கொடுத்து தற்போது 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வரும் விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அதுபோல 2002ம் ஆண்டு தாவா 1வது லக்க சொத்தில் 12 செண்டு மட்டும் 1ம் பிரதிவாதியின் கணவர் 5ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்து அதன் பின்னீடு 5ம் பிரதிவாதியின் தகப்பனார் அவரது மகன் 5ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 20 வருடங்களுக்கு முன்பாகவே 1ம் பிரதிவாதியின் கணவரின் தந்தை பாக்கியம் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களை அவரது

ஒரே மகனான பாண்டியனுக்கு கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் தான் பாண்டியன் உயிருடன் இருந்த காலத்தில் மேற்கண்ட 3. 4. 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நன்றாக தெரிந்தும் எனது மனைவி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கும் 2ம் வாதியின் குடும்பத்திற்கும் உதவி செய்து தான் கடனை கட்ட முடியாமல் 1ம் பிரதிவாதியின் கணவர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. இன்று வரை பட்டா பாக்கியம் பெயரிலிருந்து மாறாமல் இருப்பதை பயன்படுத்தி சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியினை தூண்டிவிட்டு நான் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1995ம் வருடம் பாக்கியம் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 2005ல் பாண்டியன் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 2021ல் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 20 வருடங்களுக்கு முன்பாகவே தாவா சொத்துக்கள் அனைத்தும் பாக்கியத்தால் பாண்டியனுக்கு கொடுக்கப்பட்டு 1, 2 வாதிகளுக்கு அனைத்து சீர் வரிசைகளும் நன்றாக செய்துவிட்டதால் 1, 2 வாதிகள் தங்களுக்கு சொத்தில் பங்கு வேண்டாம் பாக உரிமை கோரமாட்டோம் என்று விடுதலை செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 2005ல் பாண்டியன் காலமான பின்பு அவர் கிரையம் கொடுத்தது போக மீதியுள்ள தாவா சொத்துக்களை அவரது வாரிசுகளான 1, 2

பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் பாண்டியனுக்கு குழந்தை இல்லாததால் 2ம் பிரதிவாதியை சட்டப்படி சுவீகாரம் எடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுவீகாரம் எடுத்த விபரம் சட்டப்படி பதிவு செய்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. சுவீகாரம் எடுத்து அந்த சுவீகார மகனுக்கு திருமணம் ஆகி குழந்தை பிறந்தது அந்த குடும்பத்தில் நடந்த விபரம் அனைத்தும் நன்கு தெரிந்திருந்தும் அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எஞ்சியுள்ள தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியும் குடும்ப ஏற்பாட்டின் பேரில் 2013ம் வருடம் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. 2013ம் வருடம் பாகப்பிரிவினை பற்றி நன்கு தெரிந்திருந்தும் எனது தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 2ம் லக்க சொத்தை 2007ம் வருடம் 3ம் பிரதிவாதி குமாருக்கு 1, 2 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2, 3 லக்க தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற 3, 4, 5 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் அதுதெரியாது போல இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே 3, 4, 5 பிரதிவாதிகளை சேர்க்காததால் தான் 1, 2 பிரதிவாதிகள் உண்மையை சொல்லி 3, 4, 5 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் வெள்ளிக்குறிச்சி. நான் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு கூட வெள்ளிக்குறிச்சியிலிருந்து வன்னிக்கோட்டை சென்று தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறேன் என்றால்

சரியல்ல. நான் 3ம் பிரதிவாதி வம்படியாக காவல் நிலையம் வரவழைத்து எனது செல்வாக்கை பயன்படுத்தி 3ம் பிரதிவாதியை மிரட்டி சொத்தை எழுதிக்கொடு என மிரட்டினேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளையும் காவல் நிலையத்திற்கு வரவழைத்து சொத்தை எழுதிக்கொடுக்க சொல்ல கஷ்டபடுத்தினேன் என்றால் சரியல்ல. 3 4 5 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கிரையத்தை ரத்து செய்ய நான் இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்து ஏற்கனவே பாண்டியனுக்கு ஒதுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அவரது வாரிசுகளும் அவர்களிடம் கிரையம் பெற்றவர்களும் அனுபவித்து வருவதாலும் அதுபற்றி எல்லா விபரமும் எங்களுக்கு தெரிந்தும் சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை நாடவில்லை என்பதால் நாங்கள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை